4320

# இன்ப வேதனை



# இன்ப வேதனை

[ நவீனம் ]

ஆசிரியர் :

K. V. வீரராகவன், B. A., B. L.

பாகனேரி.

PRESENTED BY:
V. RM. VL. M.
KASIVISWANATHAN CHETTIAR
NAGANERI.

இராஜாம்பிகை கம்பெனி,

14, பேஷின் வாட்டர் ஒர்க்ஸ் தெரு,

சௌகார்பேட், :: சென்னை.

முதற்பதிப்பு, ஜூன், 1949.
விலை அணா எட்டு.

(உரிமை பதிவு செய்யப்பெற்றது.)

# உரிமையுரை

※

எனது இலக்கிய மோகத்துக்கு இடமளித்து
என் கலையார்வத்தை வளர்த்த
இராணிப்பேட்டை. கலையன்பர் கழகத்தினர்க்கும்,
பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தாருக்கும்
இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

※

கே. வீ. வீ.

முத்துக்குமரன் அச்சகம்,
14-A, குப்பையர் தெரு, சென்னை - 1.

# முன்னுரை.

இந்த நாவலை இயற்றும்படி என்னை வற்புறுத்தியது எனது உயிர்த்தோழர் தி. ரங்கசாமி. பலவகையில் அவருக்கு நான் கடமைப் பட்டிருப்பினும் நாவல் அல்லது நவீனம் எழுதுவது மிகவும் கேவலமான வேலை என்று எண்ணியிருந்த என்னை அவ்வேலையிலுள்ள ஊக்கத்தையும், உற்சாகத்தையும் உணர வைத்த பணிக்காக, நான் என்ன கைம்மாறு செய்யக் கூடும்?

எழுத்தாளர் உலகில் நான் முன்னணியில் நிற்பதாக மார்தட்டிக்கொண்டு வர முடியாத போதிலும் என்னை முன்னுக்கு இழுத்துவிட்ட மும்மணிகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஆஸ்துமா வியாதியினால் அல்லலுற்று அடியோடு உற்சாகம் குன்றிக் கிடந்த என்னைத் தட்டிக்கொடுத்துக் கிளப்பி விட்டுச் "சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை" என்னும் பாடத்தைப் போதித்தவர் சிந்தனைச் சுடர் வ. ரா.

எழுத்தாளர் உலகில் என்னை யாரும் அதிகமாக அறியாத காலத்திலேயே, "எழுத்து நன்றாயிருக்கிறது. ஓய்வுள்ள போது பேனா ஓட்டும்" என்று உத்தரவிட்டவர் புதுவைக்கவி யோகி சுத்தானந்தர்.

"அறிஞர்" என்ற பட்டத்தை என் மீது சுமத்தி, என் கட்டுரைகளையும் கடிதங்களையும் மிகவும் பாராட்டி என்னை இன்பக் கடலில் முழுகடித்தவர் பேராசிரியர் அ. சீனிவாசராகவன்.

ஆகவே, இன்று பேனா ஓடுகிறது; ஓய்வில்லாமலே ஓடுகிறது. முழுக் குற்றமும் என்மேலல்ல என்பதற்கே இந்த சுயப்பிரதாபம்.

இனி, இப் புத்தகத்தைப்பற்றி நான் என்ன சொல்லமுடியும்? படித்துப் பாருங்கள் என்று மட்டும்தான் சொல்ல முடியும். நவீனம் நன்றாயிருந்தால் படித்துச் சொல்லுங்கள்; இன்னும் பல எழுதித் தள்ளுகிறேன். நன்றாயில்லை என்றாலும் சொல்லிவிடுங்கள், "நாவல் எழுதுவது கேவலமான வேலையாச்சே!" என்று சொல்லிக்கொண்டு வேறு துறைகளில் ஒரு கை பார்க்கிறேன்!

ஒன்றுமே சொல்லாவிட்டால் அதுவும் சரிதான்! இந்தக் காலத்தில் இவ்வளவு மலிவான நாவல் ஒன்றை வெளியிடும் இராஜாம்பிகை கம்பெனியாரையாவது என்னுடன் சேர்ந்து பாராட்டுங்கள். வணக்கம்.

தமிழ்த்தொண்டன்
**கே. வீ. வீரராகவன்.**

## அணிந்துரை:

### நல்ல சரக்கு!

நண்பர் வீரராகவன் கைதேர்ந்த எழுத்தாளராக ஆகிவிட்டார். சட்டம் பயின்ற ஒருவருக்கு எதுதான் கஷ்டம் என்று வேடிக்கையாகச் சொல்லலாம். சட்டம் பயின்றவர்கள் எல்லோரும் எழுத்தாளர்களாக ஆகிவிடுகிறார்களா? அவர்கள் வழக்காடுவார்கள், வாதாடுவார்கள். எழுத்தாளனுக்கும் வக்கீலுக்கும் பொதுவான அம்சம் ஒன்று உண்டு. மனப்போக்கைக் காணும் இயல்புதான் இருவருக்கும் பொதுவானவை. வக்கீல் வீரராகவன், மிகச் சிறந்த மனோதத்துவ நிபுணராக, இந்த 'இன்ப வேதனை'யில் மலர்ந்திருக்கிறார். பெரிய பெரிய நோய்களை, சின்னஞ் சிறிய மருந்தைக் கொண்டு குணப்படுத்துவது சிறந்த வைத்தியர்களின் சாமர்த்தியமாகும்.

குடும்ப வாழ்க்கையில், கணவனுக்கும் மனைவிக்கும் இடையே, சந்தேகம்

தோன்றுமாகில்; அந்த வீடு பாழாய்ப் போவது நிச்சயம். பல துளி பெருவெள் ளம் ஆவதுபோல, சிறு சிறு சந்தேகங்கள் மலையைப்போல உருவம் பெற்று விடுகின் றன. பின்னர், கொலையும் தற்கொலையும் நேருவது வெகு சகஜம். இப்பேர்ப்பட்ட விபரீதமான முடிவை வீரராகவன் சிறிய தொரு சாதனத்தால் மிக்க திறமையுடன் தடுத்திருக்கிறார். எவ்வாறு என்று என்னை நீங்கள் கேட்காமல், நூலைப் படித்துப் பார்த்தால் தெரிந்து கொள்ளு வீர்கள்.

நூல், எளிய நடையில், எல்லோருக்கும் அர்த்தமாகும்படியான முறையில் எழுதப் பட்டிருக்கிறது. நூலில் கதைப்பகுதி மிகக் குறைவு; சிந்தனைப் பகுதி மிக அதிகம். அதனாலேதான் சுவாரஸ்யமாக இருக்கிறது. அதற்காக ஆசிரியருக்கு எனது பாராட்டு.

நுங்கம்பாக்கம்
19 - 6 - 49.

**வ. ரா.**

# நன்றி

மலிவான விலையில் நல்ல நூல்கள் பல வற்றைப் பிரசுரித்துத் தமிழர்களது தனி மதிப்பைப் பெறும் பெருநோக்குடன் தோன்றியுள்ளது, இராஜாம்பிகை கம்பெனி.

எங்கள் கம்பெனியின் நோக்கத்தில் மிகவும் ஊக்கம் காட்டி நண்பர் திரு. கே. வீ. வீரராகவன் இந்த நவீனத்தைத் திறம்படத் தீட்டித் தந்துள்ளார். அறிஞர் வ. ரா. அவர்கள் கூறுகிறபடி சட்டம் படித்தவர்கள் எல்லாம் எழுத்தாளர்கள் ஆகிவிடுவதில்லை; ஆகிவிடவும் முடியாது. இந்நூலின் மூலம் தான் ஒரு சிறந்த எழுத்தாளர் என்பதை நிரூபித்துள்ள ஆசிரியருக்குத் தமிழகத்தின் சார்பில் எங்கள் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி, இந் நூலுக்கு அணிந்துரை எழுதித் தந்த பேராசிரியர். வ. ரா. அவர்கட்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இராஜாம்பிகை கம்பெனியார்.

# பொருளடக்கம்


எண். பக்கம்.

முதல் பகுதி

சதானந்தன் சொல்கிறான்.

| | | |
|---|---|---|
| 1 | அந்த நாட்கள்! | 9 |
| 2. | இன்ப வேதனை | 13 |
| 3. | கண்டேன்! கண்டேன்! | 18 |
| 4. | காந்தம் கவர்ந்தது! | 22 |
| 5. | சின்னஞ் சிறு சம்பவம் | 26 |

இரண்டாம் பகுதி

சுதாமதி கூறுகிறாள்.

| | | |
|---|---|---|
| 1. | அந்த நாட்கள்! | 31 |
| 2. | தளை முறிந்தது! | 35 |

மூன்றாம் பகுதி

ஆத்மராமன் உரைக்கிறான்.

| | | |
|---|---|---|
| 1. | மனக்கலக்கம் | 40 |
| 2. | உல்லாசப் பயணம் | 43 |
| 3. | வேதனையா, இன்பமா? | 46 |


---

| பிழை. | பக்கம் 40 | திருத்தம் |
|---|---|---|
| ஆத்மராமன் உறைக்கிறான். | | ஆத்மராமன் உரைக்கிறான். |

# இன்ப வேதனை

## முதல் பகுதி

## சதானந்தன் சொல்கிருன்.

### 1

### அந்த நாட்கள்!

அடடா! அவற்றை இனி நான் கனவிலாவது காணமுடியுமா? அந்த நாட்களைப்பற்றி நினைக்கும்போதே என்னை இப்படி ஏதோ லாஹிரிபோலல்லவா ஆட்டி வைக்கிறது!

'லாஹிரி' என்று சொன்னேன்? ஆம்; அந்த இன்பம் வெறும் லாஹிரிதான். மது உண்டவனுடைய மயக்க இன்பந்தான். கள்ளைக்குடித்து கண்டபடி பிதற்றிக் கண்டோருக்கெல்லாம் நகைப்பூட்டும் காட்சி யாக அது இல்லை என்பது உண்மை. ஆனல், என்னைப் பொருத்த வரையில்—புறவிருளைக் காண அஞ்சி, தனித் திரை ஒன்றைப் போட்டுக்கொண்டு வெளியில் சஞ்சரிக்

காது வாழும் செயற்கை உலகின் நிலையாத இன்பமாகிய அவ்வின்பத்தை மது உண்டவனது மயக்க இன்பத்துக் குத்தான் ஒப்பிட முடியும்.

ஆனால், அவ்வின்பத்துக்குத்தான் என்ன குறைவு என்று நான் கேட்கிறேன்? வாழ்க்கையில் எனக்கு என்ன குறை இருந்தது?

பணக்காரக் குடும்பத்தில்தான் பிறந்தேன்—அதனால் பலரைப்போல் படிப்பில் அக்கரை யில்லாது போக வில்லை. படித்த நாட்களில் நான் பெற்ற பெயரும் புகழும் இனியுமா எனக்குக் கிடைக்கப் போகின்றன? ஆறும் வகுப்பிலேயே கட்டுரைத் தேர்ச்சியில் முதன்மை பெற்று "திருக்குறள்" புத்தகம் ஒன்றைப் பரிசாகப் பெற்றேன். அப்போது எனதன்னை என்னை வாரி யணைத்து முத்தமிட்டுக் கொஞ்சியதும், சிறு குழந்தை யைப்போல் பரிசெல்லாம் வாங்கிப் பெரியமனிதனாகி விட்ட என்னை இவள் முத்தமிடுகிறாளே என்று என் நெஞ்சில் ஏற்பட்ட அந்த அருவருப்பு கலந்த வெட்கமும் இன்னும் எனக்கு அப்படியே நினைவிருக்கிறது. பத்தாம் வகுப்பில் என் நண்பன் ஆத்மராமனும் நானும் கணக் குத் தேர்வில் நூற்றுக்கு நூறு மார்க்குகள் வாங்கி விட்டோம். அது முதற்கொண்டு எங்கள் இருவரை யும் இதர நண்பர்கள் வீட்டில் "ஏண்டா—கணக்கிலே நூறுமார்க் வாங்கின பையன் வந்திருக்காண்டா" என்றே அடையாளம் சொல்ல தலைப்பட்டுவிட்டார்கள். அதைக் கேட்டு ஆத்ம ராமனும் நானும் அடைந்த மகிழ்ச்சி— அதற்கு ஈடும் இணையும் உண்டா என்ன?

கல்லூரிக்குச் சென்ற பிறகு இன்டர் மீடியேட் வகுப் பில் வடுவூர் துரைசாமி அய்யங்கார், ஆரணி குப்புசாமி முதலியார் முதலியவர்களது நாவல்களைப்படித்து இன் புற்றதன் பயனாக பரீட்சையில் தேர்ச்சியடைய முடிய

வில்லை. அப்போதும் பெரியவர்கள் என்மீது குறை கூற வில்லை. ''இந்தப்பாழும் சென்னைப் பல்கலைக்கழகமே இப்படித்தான்-உலகத்திலேயே இதில் தேர்வதுதான் கடினம்; இந்தப் பல்கலைக்கழகத்திலும் இன்டர் மீடியட் பரீட்சையைப் போன்ற கடுமையானது வேறொன்றும் கிடையாது. ஆனைப்பட்ட ஜே. கிருஷ்ணமூர்த்தியே இதில் ஒன்றல்ல-இரண்டல்ல ஒன்பதுமுறை முயன்றும் தேறமுடியவில்லை, என்றெல்லாம் எனக்கு ஆறுதல் கூறி வந்தார்கள்.

ஆனால், பி. ஏ. வகுப்பு எனக்கு இந்திரபோகத்தையே கொண்டுவந்துவிட்டது என்பது மிகையல்ல. வகுப்பில் முதன்மை பெற்றுத் திகழ்ந்தேன்; பேச்சு மேடை, ஆட்டப் பந்தயங்கள், இவற்றிலும் ஒருங்கே பெயர் பெற்றேன். கல்லூரித் தோழர்களுடன் கூடிக் கொண்டு உல்லாசமாகச் சினிமாவும் நாடகமும் பார்த்து அவைகளுக்கு விமரிசனம் அளித்துக் களித்தேன். எதை எடுத்தாலும் எதிர்ப்பது என்று கட்சி கட்டிக்கொண்டு கேலிப் பேச்சுக்கள் பேசிக் காலம் போக்கினேன்.

கல்லூரி விவாதக்கழகத்தின் தலைமைப் பதவிக்காகப் போட்டியிட்டு நான் நடத்திய பிரசாரம் அரசியல் கட்சிப் பிரசாரங்களையெல்லாம் தூக்கியடித்துவிட்டது, போங்களேன்! பேச்சுப்போட்டியில் முதன்மை பெற்றுவிட்டேன் என்று என் நண்பர்கள் என்னை எவ்வளவு பாராட்டினார்கள் தெரியுமா?

கல்லூரி வாழ்க்கை, பள்ளி வாழ்க்கை என்று இப்படியே சொல்லிக்கொண்டு போகிறேனே, வீட்டு வாழ்க்கையில் மட்டும் ஒரு அப்பழுக்குண்டா? ஒரே ஒரு மகன். ''ஒண்ணே ஒண்ணு, என் கண்ணே கண்ணு'' என்று போற்றி வளர்த்த செல்லக்குழந்தை. கேட்டதை மறுக்காது கொடுக்கக் காத்திருந்தார் என் தந்தை. தாயைப்பற்றித்தான் சொல்லத் தேவையேயில்லை!

"ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தன் மகன்
சான்றோனெனக் கேட்ட தாய்"

என்பதற் கிணங்க என் பெருமைகளைக் கேட்டுக் கேட்டுப் பூரிப்படைவாள் என் தாய். கல்லூரிமாணவனான பின்பும் அவள் என்னை வலியப்பிடித்திழுத்து உட்காரவைத்து திருஷ்டி கழிப்பாள். அப்போதெல்லாம் அவளுடைய 'மூடத்தனத்தின் முடை நாற்றத்தைக்' கண்டு புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு மேலாகவே எனது உள்ளமும் கோபத்தால் பொங்கி எழும்; ஆனால் அவளது ஆறாத பற்றையும் தீராத ஆசையையும் மாறாத பாசத்தையும் கண்டு எனக்குப் பரிவுணர்ச்சி ஏற்பட்டுவிடும். உள்ளத்தின் உணர்ச்சி அலைகளின் முன் அறிவுத் திவலைகள் அடித்துக்கொண்டு போகப்பட்டதில் வியப்பு ஒன்று மில்லையே?

அப்பாவைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

அவர் ஒரு அசகாய சூரர்! கல்லூரிப்படிப்பின் மூலம் அமெரிக்கப் பெருமக்கள் பலரைப்பற்றி நான் நன்கறிந்திருந்தேன். பத்திரிகை விற்கும் பையனாயிருந்து படிப்படியாய் முன்னேறி முதலாளித்துவ உலகில் மில்லியனேர்களான ராக் பெல்லர், ஹென்றிபோர்ட்,, கார்னேகி முதலியவர்களைப்பற்றித் தெரியும். பழத் தோட்டங்களில் வேலை செய்து ஒழிந்த நேரத்தில் படித்து முன்னுக்கு வந்த நம் ஜெயப்பிரகாசர் போன்ற பிரமுகர்களைப் பற்றியும் படித்திருக்கிறேன். இந்தச் சரித்திரங்களையும் கதைகளையும் படிக்கும் போது என் அகக்கண் முன்பு எனது தந்தையின் வாழ்க்கைச் சரிதை சினிமாப் படம் சலனமிடுவது போல எனது மனத்திரையில் நடமிட்டு உலாவும்.

சிறுகச் சிறுகப் பணம் சேர்த்து ஒரு சின்ன முதலாளியானவர் அவர். ஆகவே, பணத்தின் அருமை பெருமைகளை உணர்ந்து பக்குவமாகச் செலவு செய்துப் பதம் பார்த்து மீதம் பிடித்துப் பணத்தைப் பெருக்கத் தெரிந்

தலர். பள்ளியில் படிக்கும்போதே ஒரு வீட்டில் சமையல் செய்து போட்டும் சில பையன்களுக்கு "டியூஷன்" சொல்லிக் கொடுத்தும் அவர் சம்பாதித்தார். சம்பாதித்த பணத்தைக் கொண்டு செட்டும் சிக்கனமுமாய் வாழ்க்கை நடத்தி மீதப் பணத்தைக் கொண்டு எங்கள் மூதாதையர் வாழ்ந்த கிராமத்தில் நிலங்கள் வாங்கிக் குவித்தார்.

அந்தச் சிக்கனத்தைக் குலைக்கவும் அவரது சேமிப்பு ஆர்வத்தைக்கலைக்கவும் தானோ என்னவோ அவருக்குப் போய் நான் பிள்ளையாய்ப் பிறந்தேன்!

நல்ல யோக ஜாதகத்தில்தான் நான் பிறந்தேன் என்று சுற்றியுள்ளவர்கள் சொல்லிக்கொண்டார்கள்.

ஜாதகத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. எது எப்படியானாலும் எனது இளமை நாட்கள் இன்பமாகத் தான் கழிந்தன.

அந்த இன்பம் இவ்வாழ்க்கையில் இனி நான் மீண்டும் பெறுவேனோ?

அடடா! அந்த நாட்கள்!

## 2

# இன்ப வேதனை

அட சீ! "இன்பம், இன்பம்!" என்று இப்படி நான் பிதற்றுகிறேனே, இது என்ன மதிமயக்கம்?

உற்று நோக்குங்கால், ஆழ்ந்து சிந்தித்தால்—உண்மையில், எனது இளமைப்பருவம்—வாழ்க்கையில் சிறந்து விளங்கிய என் வாலிபப் பருவம்—இன்பத்திலா கழிந்தது? வறண்ட வாழ்க்கையின் வெளித்தோற்றமான பாலை வனத்

துக் கானல் நீர்தான் இன்பம் என்பதா? உலகத்திலே ஒய்யாரமாக உலாவி வருவதற்காக—சமூகம், சமூகம், என்று சொல்கிறார்களே அந்த மாய உலகில் பவனி வருவதற்காக—இன்பம் என்னும் அப் பட்டுப்போர்வை தன் பகட்டுடன் உதவியிருக்கலாம். ஆனால், இன்று அகக் கண் கொண்டு பார்த்தால் அந்த இருள், அளவிட்டுச் சொல்ல முடியாத அந்தகாரம், அந்த ஆழந்தெரியாத குருட்டுப்பாதை, இதோ தெட்டெனப் புலப்படுகிறதே! தனது ஜோதிமயமான ஒளியிலே இன்பமென்னும் அந்த ஜாஜ்வல்யமான டார்ச்லைட் தன் ஒளியைக் கண்ணுக்கு நேராக வீசிப்—புறவிருளைக்காணாதபடி என் கண்களைக் கவர்ந்துவிட்டது. ஆனால் கண் கூசினதும் வேறு பக்கம் திரும்பி நான் கண்ட அந்தப் பயங்கரமான இருள்—அம்மம்மா!—அதை வருணிக்க என்னால் இயலுமா?

சுருங்கச் சொன்னால், வாழ்க்கை என்னை இன்பத்தில் ஆழ்த்தி வைக்க அரும்பாடுபட்டது. ஆனால் நான் அந்த இன்பத்தில் வெறுப்படைந்தேன்; வேதனையே கண்டேன்.

சூழ்நிலையை ஒட்டி மனிதன் மன நிலையும் மாறும் என்பதில் ஐயமில்லை. "மனம் ஒரு தனி இடம்; சுவர்க்கத்தை நரகமாக்கவும் நரகத்தை சுவர்க்கமாக்கவும் அதனால் இயலும்" ('The mind is its own place--It can make a heaven of hell or a hell of heaven -Milton's paradisc lost') என்று கற்றறி மூடர்கள் மில்தனை அடிக்கடி இன்றும் மேற்கோளாகக் கூறி ஆறுதலை நாடும் விந்தைதான் என்னே! இந்த வாக்கியத்தை மில்தன் 'சுவர்க்க நீக்கம்' என்னும் கவிதையில் சைத்தானின் வாயிலாக வல்லவா சொல்கிறான்?

மனிதன் மனத்தைச் சூழ்நிலை பாழ்படுத்தாது என்பது உண்மையா? விசுவாமித்திரன்—வீரமே உருவான

விசுவாமித்திரன்—ரௌத்திராகாரத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாக இலங்கும் விசுவாமித்திரன்—விடாமுயற்சிக்கு ஒரு உதாரணமாகி விட்ட விசுவாமித்திரன்—மேனகையைக் கண்டு மோஹித்து சகுந்தலை என்னும் அரிய ரத்தினத்தைப் பெற்றது மனத்தின் உறுதியாலா அல்லது சூழ்நிலையின் காரணமாக விளைந்த மனத்தடுமாற்றத்தின் விளைவினலா?

சுற்றிலும் துயரக்காட்சிகளேயே கண்டு கண்டு மனம் பதைத்த நான் மாசற்ற இன்பத்தை நுகர்ந்தேன் என்பது உண்மையாகுமா? துன்பச் சாயலைக்கூடத் துடைத்து என்னை இன்பக்கேணியில் என்றென்றும் இருக்கச் செய்ய எனது உறவினர் அரும்பாடு பட்டனர். ஆனல் வெளியுலகைக் கண்ணுல் பார்த்தலும் தகாது என்று திரையிட்டு மறைத்து வைக்கப்பட்டபோதிலும் இல்லத்தின் அமைதியைக் குலைத்துக்கொண்டு, அருமை மனைவி யசோதரை, இளங்குழந்தை ராகுலன் இவர்கள் கதி என்னவாகும் என்பதுபற்றித் துளியும் சிந்திக்காமல் சித்தார்த்தர் அரண்மனை வாழ்க்கையை அறவே வெறுத்து வெளியேற நேரிட்டதல்லவா? அப்படியிருக்க நாள்தோறும் பணக்காரன் பத்தடுக்கு மெத்தை கட்டி வாழ்வதையும் அவன் கண்ணெதிரில் கஞ்சியில்லாமல் 'பஞ்சமோ பஞ்சமென்றே' பரிதவிக்கும் ஏழைகளின் நிலைமையும் கண்டு கொதித்தெழுந்த என் மனக்கொந்தளிப்பு என் வாழ்க்கையில் எப்படி என்னை அமைதியாக விட்டுவைக்கும்?

ஆகவே, எனது குடும்ப சுகமே, வாழ்க்கையில் நான் அடைந்த அந்த ஆனந்தமே, எனது தனி இன்பமே, எனக்கு வேதனையைத் தந்தது. "பல்லாயிரவர் பசித்துப் பட்டினிகிடக்க, நாட்டின் மேன்மக்கள் பூட்டப்பட்டு சிறையில் வாட, உடை, இடம், உணவு ஆகிய முக்கிய சாதனங்களே பலருக்கு மறுக்கப்பட, நீ மட்டும் இப்படி

சிச்சிந்தையாகக் காலங்கழிக்கிறயே, இது உனக்குத் தகுமா?'' என்று என்மனம் என்னை ஏசியது. ஆனல் அவ்வுண்மையை ஊடுருவிப் பார்க்கவோ என் கண் கூசியது!

மேலும், இந்த இன்னலை எனது அத்தியந்த நண்பன் ஆத்மராமன் வாழ்க்கையில் அடிக்கடி கண்ணுற்ற நான் ஏழை எளியவர் நிலைக்கு இரக்கம் காட்டியதில் அதிசயம் ஒன்றுமில்லை. கல்லூரிப்பட்டம் பெற்று உலகத்தின் தலைவாயிலில் காலை எடுத்துவைக்கும்போதே ஆத்மராமன் தரித்திரத்தின் சின்னமாக விளங்கினன்.

ஆத்மாராமனும் நானும் இணைபிரியாத நண்பர்கள். என் தந்தை எளிய நிலையில் இருந்ததைப் பற்றி நான் கேள்விப்பட்டிருந்தேனே ஒழியப்பார்த்தது கிடையாது; அது சரித்திரம்! ஆனல், இதோ ஆத்மராமனது அவல வாழ்க்கை, அவஸ்தை நிறைந்த அனுபவம், ஏழ்மையின் சின்னம், நான் என் கண்முன் காணும் காட்சி!

அவனுக்கென்ன அறிவில் குறைவா? பொருளாதார வகுப்பில் நான் முதன்மை பெற்றிருந்தது போல் தத்துவ வகுப்பில் (Philosophy) அவன் முதன்மை பெற்றிருந்தான். என்னைப்போல் பணத்தை லட்சியமின்றி வாரி வீசி இறைக்க இயலாததால் அவனது அறிவும் திறனும் அபாரமாய்ப் பிரகாசிக்காமல் குடத்தில் வைத்த விளக்கைப் போல் அடங்கியே காணப்பட்டது. இருந்தாலும், நெருங்கிப் பழகிய எனக்கு அவனுடைய உயர்வும் மதிப்பும் தெரியாமல் போகுமா?

எப்படியோ கஷ்டப்பட்டு அவனும் ஆனர்ஸ் வகுப்பை மூன்று வருடங்களாகப் படித்துக் கடத்திவிட்டான். பரீட்சையின்போது கேள்வித்தாள் அவுட்டாகுமோ, மறு முறை 'ரீ-எக்ஸாம்' எழுத வேண்டியிருக்குமோ என்

றெல்லாம் அவன் கவலைப்படக் காரணமில்லை. ஆனல் பரீட்சை தொடங்கியதும் வாழ்க்கைப் பிரச்சினையின் அடிப்படைக் கவலையே அவனை ஆட்டிவைக்கத் தொடங்கி விட்டது. பரீட்சை தேறிய பின் என்ன செய்வது என்ற கவலையே அவனைப் பெரிதும் வாட்டி யெடுத்தது!

அவ்வப்போது அவனுக்கு என்னல் இயன்ற சின்னஞ் சிறு உதவிகளைச் செய்து கொண்டு வந்தேன். அதற்குமேல் அதிகமாய்ப் பொருளுதவி செய்வதற்கோ எனக்குப் பயம். ஆலிவர் கோல்ட்ஸ்மித் என்ற ஆங்கில ஆசிரியன் சொன்னமாதிரி "ஏழைகளின் துயரைத் துடைக்கும் சக்தியை அளிக்காது, அவர்களது நிலை கண்டிரங்கும் நெஞ்சை மட்டும் அளித்துவிட்டாயே ஈசா!" என்று ஏங்குவதைத் தவிர என்னல் வேறென்றும் செய்ய முடியவில்லை.

அவன் வாழ்க்கையைக் கண்டு என் வேதனை அன்றாடம் அதிகரித்து வந்தது. இதை மனத்தில் வைத்துக் கொண்டே நான் என் தந்தை எவ்வளவோ வற்புறுத்தியும் சட்டக்கல்லூரியில் சேர மறுத்துவிட்டேன். ஆத்மராமன் துணையில்லாது இன்னும் இரண்டு வருடங்கள் படிப்பது அசாத்தியம் என்று தான் எனக்குத் தோற்றியது. வழக்கம்போல் என் விருப்பத்துக்கு விரோதமாய் வற்புறுத்தாமல் விட்டு விட்டார் என் தந்தை.

ஆனல், என் வாழ்க்கைத்தரத்தில் தந்தையின் அக்கரை குறைந்து விடுமா? தூர உறவினர் ஒருவரைப் பிடித்துச் சிபாரிசு செய்து என்னை ஒரு பத்திரிகாலயத்தில் வேலைக்கு அமர்த்திவிட்டார் என் தந்தை!

"பரீட்சை தேறினதும் தேருததுமாக உடனே இப்படி ஒரு தொல்லையா?" என்று வேண்டா வெறுப்பாக நான் ஆபீசில் காலடி எடுத்து வைத்தேன்.

"பரீட்சை தேறி என்ன பயன்? முதல் வகுப்பில் தேறினாலென்ன, மூன்றும் வகுப்பில் தேறினால் என்ன? வேலை கொடுப்பவர்கள் யார்?" என்று கவலைப்பட்டவண்ணம் ஆத்மராமன் வீட்டில்நின்றான்!

# 3

## கண்டேன்! கண்டேன்!

கல்லூரியிலிருந்து வெளியேறிய பின்னும் பேச்சு மேடையின் தொடர்பு விடாதிருந்தது எனக்கு ஓரளவுக்கு ஆறுதல் அளித்துவந்தது. பத்திரிகாலயத்தில் இருப்பவன் எதைப்பற்றி வேண்டுமானாலும் பேசும் அளவுக்கு அறிவு படைத்திருப்பவன் என்ற எண்ணம் எப்படியோ நம் சமூகத்தில் நிலவி வருகிறது. மேலும் ஏதோ பேசத் தெரிந்தவன் என்ற பெயர் எனக்கிருந்ததால் அடிக்கடி பல சங்கங்களில் பேசும்படி நான் வற்புறுத்தி அழைக்கப் பட்டேன்.

அப்படிப்பட்ட கூட்டம் ஒன்றுக்குப் போவதற்காகத்தான் அன்று நான் அலுவலகத்தை விட்டு அவசர அவசரமாக பஸ் ஸ்டாண்டுக்கு விழுந்தடித்துக்கொண்டு ஓடினேன்.

யோகிகள் தவம் செய்வது எளிது; ஆனால் மவுண்ட் ரோட்டில் பஸ்ஸுக்காகக் காத்துநிற்கும் இக்காரியம்—அம்மம்மா—அரிது, அரிது! அந்த அவஸ்தை அனுபவித்தவர்களுக்கல்லவா தெரியும்? அதிலும் இந்தப்பாழும் பதினொன்றும் நெம்பர் பஸ் அரை மணிக்கு ஒன்றுகூட வந்து தொலைக்கமாட்டேன் என்கிறதே! அப்படியாக ஒன்று வந்தாலோ அதில் கும்பல் நிறைந்திருப்பதால் டிரைவர் அங்கு நிறுத்தாமலே விர்ரென்று வேகமாய் ஓட்டிக்

கொண்டுபோய் விடுகிறன். ஏதோ ஓரளவு தயாள குணம் படைத்த டிரைவராயிருந்தால் கையை ஆட்டி ஆட்டி நிறுத்தச் சொல்லிச் சைகைகாட்டும் பிரயாணிக்குப் பதில் சைகையில் "இடமில்லை" என்று கையை விரித்துச் சைகை காட்டிவிட்டுப் போவான். சில டிரைவர்களுக்கு வேண்டு மென்றே பஸ் ஸ்டாப் இல்லாத இடத்தில் நிறுத்திப் பிரயாணிகளை இழுக்கடித்து ஏமாற்றுவதில் ஒரு தனி இன்பம்.

எப்படியிருந்தால் என்ன; எனக்கு வெகு நேரமாக பஸ் கிடைக்கவில்லை. தவம் கிடந்தும் பயனென்ன? ஒரு கூட்டத்துக்காவது தாமதித்துப் போனேன் என்ற பெயர் கிடையாது. "Punctuality" என்பது சதானந்தனுடன் பிறந்த பண்பு என்று பலர் கொண்டாடிய பெருமை அன்று காற்றில் பறந்து விடும்போலிருந்தது. மகத்தான கூட்டம்—முக்கியமான பிரச்சினை—மாம்பலம் போன்று அறிவாளிகள் வசிக்குமிடம். அன்றையதினம் இந்தச் சோதனையானல், எனக்கு ஆத்திரம் வராதா?

மனிதர் மீது மனிதர் பாய்ந்து வானரர் போல் கம்பியைத் தொத்தி ஏறும் இந்தப் போட்டி யுகத்தில் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளாவிட்டால் கூட்டத் துக்குப் போவது எப்போது?

அப்போதுதான்— அந்த ஆத்திரத்திலும் அவசரத்திலும்தான்— அவளைக்கண்டேன்!

அவளும் அருகில் அதே பஸ்ஸுக்காகக் காத்திருந்த பலருள் ஒரு பிரகிருதி என்பதை உணர்ந்தேன். இருந்தும் என்ன செய்வது? என் அவசரம் எனக்கல்லவா தெரியும்? அந்தப்பெண்ணைத் தள்ளிக்கொண்டு விழுந் தடித்து ஓடி இடம் பிடிப்பதைத் தவிர எனக்கு வேறு வழி ஒன்றும் புலப்படவில்லை.

அம்மம்மா! சுட்டெரிப்பதுபோல் என்னை அன்று அவள் பார்த்த அந்தப்பார்வை! "மனிதனா இவன்-Brute- காட்டு மிராண்டி!'' என்று அவள் முணு முணுத்த அந்தச் சொற்கள்! அவற்றை அப்படியே ஒரு ஓவியம்தீட்டி உங்களுக்கு உணர்த்தவல்ல கலைஞனாக நான் இருந்தால் இப்படியெல்லாம் ஏதேதோ புரியாத புதிர்களைப் போட்டு உங்களைத் திணறடிக்க மாட்டேனல்லவா?

புரியாத புதிர்! - ஆம்! வாழ்க்கை என்பது விசித்திர மான புதிர்தான்! புரிந்தும் புரியாத புதிர்! என்ன அதி சயம் பாருங்களேன்! அந்தக்கூட்டத்துக்குப் போனால் நான் எங்கே 'லேட்' ஆகிவிட்டேனோ என்ற பயம் பறந் தோடிவிட்டது. அன்றையதினம் தலைமை வகிக்க இருந்த மாது சிரோன்மணி வரவேயில்லை! உரிய காலத்தில் கூட் டம் தொடங்குவதற்கு நான் சித்தமாய் இருந்தேன். ஆனால் சங்கத்தின் செயலாளர் தலைவியார் சுதாமதி அவர் களின் பிரதாபங்களை எனக்கு எடுத்துக்கூறி இன்னும் சில நிமிஷங்களில் அவர் அவசியம் வந்துவிடுவார் என்று கூறவே நானும் "எனக்கொன்றும் அவசரமில்லை, வரட்டும் வரட்டும்'' என்று உபசாரத்துக்குச் சொல்லிவைத்தேன்.

ஆனால், தலைவியாரைக் கண்டதும் அவருக்கு அறி முகம் செய்விக்க ஆவலுடன் வந்த செயலாளரை நான் கவனிக்கவே இல்லை. இப்படியும் ஒரு அதிசயம் நிகழுமா? இதுவும் என்ன வாழ்க்கையா அல்லது ஏதாவது நாவல் களைப் படித்ததன் பயனாக நான் காணும் கனவா? பஸ் ஸில் ஏறும்போது பார்த்த அந்தப் பெண்தானா தலைவி "சுதாமதி அம்மையார்''? 'சுதாமதி அம்மையார் தலைமை வகிப்பார்' என்று அச்சில் படித்ததும் புனிதவதியார், காரைக்காலம்மையார் போன்ற ஒரு பரமபக்த மாது சிரோன்மணியின் உருவம்தான் என் மனக்கண்முன் நின்றது.

அதிகம் சொல்வானேன்; எனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைவிடத் தலைவியார் அடைந்த சீற்றம் மிக மிக அதிகம் என்பதை அவள் முன்னுரை நன்கு காட்டிவிட்டது. இந்தக்காலத்து இந்தியன் கூட இன்னும் "Chivalry" (சிவல்றி) என்னும் நற்பண்பை உணரவில்லையாம். இந்தப் பெரும் பண்பை ஆங்கிலேயரிட மிருந்துதான் பிச்சை வாங்கவேண்டுமாம்! இப்படிப்பட்ட ஒரு பெண்ணை தேசபக்தி மிக்கவள், தெய்வபக்தி கொண்டவள், அருமையான மாது சிரோன்மணி என்றெல்லாம் நான் எண்ணியது என்ன மதியீனம்! "ஒரு பெண்ணுக்கு மரியாதை காட்டத்தெரியாத பேர்வழிகளெல்லாம் இன்று தேசத்தைக் காப்பாற்ற முற்பட்டு விடுகிறார்கள்!" என்று என்னை மறைமுகமாக வேறு தாக்கவுமல்லவா ஆரம்பித்து விட்டாள் அவள்!

நான் மட்டும் சளைத்து விடுவேனா? கல்லூரியில் விவாதப் பழக்கத்தில் ஊறிப்போனவ னல்லவா நான்? என்றுமில்லாத ரோஷத்துடன பேசியதால் அன்றைய பேச்சு அற்புதமாய் அமைந்து விட்டது. அந்த சொற்பொழிவின் முடிவு—என் சொற்பொழிவின் முடிவுதான்-இன்னும் என் செவியில் ஒலிக்கிறமாதிரியல்லவா இருக்கிறது! காதைப் பிளக்கும்படி எழுந்த அந்தக் கை தட்டலையும் சபையோர்களின் சந்தோஷ ஆரவாரத்தையும் நான் என் வாழ்க்கையில் ஒரு நாளும் மறக்க முடியாது!

"ஒரு பெண் பரிதவிக்கும் நிலையில் அவளைக் கை தூக்கி விடுவதுதான் 'சிவல்றி' என்னும் பண்பு. ஆணுடன் பெண்ணும் 'சரிநிகர் சமானமாக' வாழ விரும்பும் பெண்கள் இன்னும் இந்தச்சிவல்றியை எதிர்பார்த்து ஏங்கி நிற்பது கோழைத்தனமே அன்றி வேறல்ல. பயிர்த் தொழில் செய்யும் பண்ணையாட்களும் ஆலைத்தொழிலில் அமர்ந்துள்ள வேலைக்காரப்பெண்களும் இத்தகைய இயல்புகளை

எதிர்பார்த்து நிற்கிறார்களா என்பதைக் கவனியுங்கள்.—இத்தகைய ஆடம்பரப்பேச்செல்லாம் மேனாட்டு மோகத்தால் எழும் வெறும் பகட்டு; உயர் வகுப்பு என்னும் மனப் பிராந்தியின் மருட்சி; 'சிவல்றி' போன்ற பிதற்றல்களைக் கேட்டால் "என்று மடியும் எங்கள் அடிமையில் மோகம்?" என்றுதான் கேட்கத்தோன்றுகிறது. ஆங்கிலேயரிடம்தான் நாம் பிச்சை யெடுக்கவேண்டும் என்று சொல்லுமளவுக்கு நம்முடைய அடிமைமோகத்தை வளரவிடாதிருந்தால் அதுவே நம் நாட்டுப் பற்றுக்குத் தக்க அறிகுறியாகும். ஆதலின், இந்த மேனாட்டு மந்திர ஜாலவித்தைகளைக்கண்டு மயங்காதீர்கள்!" என்றெல்லாம் அன்று நான் பேசினேன்.

"மயங்காதீர்கள்!" என்று பிறருக்கு எச்சரிக்கை செய்தேன், வீரதீரமாக! ஆனால், நான் மயங்காமல் இருந்தேனா? அன்று முதற்கொண்டு என் வாழ்க்கையில் புது வேதனையல்லவா புகுந்து கொண்டு விட்டது! ஆனால், அந்த வேதனையில்தான் எத்தனை இன்பம்! மீண்டும் உறுதியிட்டுக் கூறுகிறேன். வாழ்க்கை என்பது ஒரு விசித்திரமான புதிர் என்பதில் ஐயமே இல்லை!

## 4

# காந்தம் கவர்ந்தது!

சுதாமதியின் சுபாவம் ஒரு நாளிலேயே விளங்கி விட்டது. விளங்கியதுடன் விட்டதா? காந்தம் போலல்லவா என்னைக் கவர்ந்துவிட்டது? பெண் குலத்தின் மீது எனக்கிருந்த அடிப்படை வெறுப்பின் காரணமாக நான் இரும்புப் பிடியாக பிடித்து ஆண் குலத்தைத் தாங்கிப் பேசி வந்தேன் என்பது உண்மை. ஆயின், காந்தத்தின்

கவர்ச்சியின் முன் இரும்பு ஆகர்ஷிக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படுவது இயற்கையின் நியதியல்லவா? வாழ்க்கையில் நிம்மதி என்பதில்லாமல், திக்குத்திசை தெரியாமல் தன் போக்கில் போய்க் கொண்டிருந்த நான் சுத்த ஜடம் தான், இரும்பு கூட இல்லை. என்னை இரும்பாக்கிக் காந்தமாக்கி திசை காட்டி வாழ்க்கையை வழியாகவும் வகையாகவும் நடத்தத்தான் சுதாமதி என் வாழ்வில் குறுக்கிட்டாளோ?

இயற்கையின் எழில், நாகரிகத்தின் மினுக்கு இவை இரண்டும் சேர்ந்து சுதாமதியைத் தனிச் சோபையுடன் விளங்கச் செய்தது.

ஆனால், அவளைப் பாவம் அனைவரும் ஆடம்பரக்காரி என்று ஏசினர்; அகம்பாவம் பிடித்தவள், ஆணவம் கொண்டவள், திமிரே உருவானவள் என்றெல்லாம் பேசினர். எனக்கு மட்டும் அவள் உள்ளத்தை ஊடுருவிக் கண்டுவிட்டது போல ஒரு பிரமை: "நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் எவர்க்கும் அஞ்சாத நெறி"—இதுவே அவளது குறிக்கோள் என்பது எனது ஊகம். இதைத்தான் மக்கள் பலவிதமாகத் திரித்தும் விரித்தும் விவரித்தும் கூறலாயினர் என்பதில் ஐயமென்ன? மணலைக் கூடக் கயிருகத் திரித்துக் கூறக் கூடிய ஆற்றல் பெற்றவர்களல்லவா நம் நாட்டு வம்பர் மகா சபைகளின் 'கனம்' பொருந்திய—அல்லது பொருந்தாத—அங்கத்தினர்கள்? அரசியலில் ஆர்வமும் பொது வாழ்க்கையில் தேட்டமும் ஒரு பெண் கொள்ளலாகாதா? அத்தகைய ஆர்வம் கொண்டதல்லவா அவள் முதற் குற்றம்?

மேலும் அவளுடைய பெற்றோர்களும் அவளைத் தன்னிச்சையாகத்தான் விட்டுவிட்டனர். "தக்கவரன் தேடித் திருமணம் புரிவிக்கும் சிரமம் உங்களுக்கு வேண்டாம். அறிவு கொண்ட மனித உயிர்களை அடிமையாக்க

முயலும் எவனுக்கும் நான் வாழ்க்கைப்படத் தயாராக இல்லை" என்பது போன்ற படபடப்பான பேச்சுகளைக் கேட்டு அவள் தந்தை "நீ சொல்வது சரிதான், அப்படியே இதே தீரத்துடன் இரு!" என்று கூறிவிட்டாராம்!

ஏனோ இப்படி அவளுக்கு ஆடவர் குலத்தின் மீதே ஒரு வெறுப்பு உண்டாகிவிட்டது. ஒரு வேளை அரசியலில் ஈடுபட்டுப் பல திறப்பட்ட ஆடவர்களுடன் பழகப்பழக அவர்களுடைய அர்த்தமற்ற கெஞ்சுதலையும் அளவுக்கு மிஞ்சுதலையும் கீழ்த்தரமான பல்லிளிப்பையும் பரபரப்பையும் இன்னோரன்ன இதர குணங்களையும் கண்டு வெகுண்டு அதன் பொருட்டு அந்த வெறுப்புணர்ச்சி அவள் உள்ளத்தில் வளர்ந்திருத்தல் கூடும்.

ஆனால், அன்று?

மேடையின் மீது தோன்றிப் பலரைப் பரவசத்தில் ஆழ்த்தி அவளை நாணவைத்து வெற்றி அடைந்தது அவளா, நானா? தலைவர் பின்னுரையில் என்னுடைய சிந்தனையைப்பற்றி அவள் ஒரு வார்த்தை கூட குறிப்பிடாதது என்து ஆணித்தரமான பேச்சின் வன்மையால் தானே? இருந்தாலும் அவள் என்னை எவ்வளவு உன்னிப்பாகக் கேட்டாள்? எத்தனையோ கூட்டங்களில் பேசுகிறோம்: பயனென்ன? பெரிய கூட்டங்களாயிருந்தால் நம்மைக் கேட்பது போல் பாசாங்கு செய்து கொண்டு பலர் தங்கள் நண்பர்களுடன் பேசிக் காலம் கழிக்கிறார்கள். இல்லாவிட்டால் சிலர் நிம்மதியாகத் தூங்கியும் விடுகிறார்கள். ஆனால், உன்னிப்பாய்க் கேட்பவர்கள் பத்துப் பனிரெண்டு பேர் தான் தேரலாம். அதிலும் கேட்டதைப் புரிந்து கொள்பவர்கள் நான்கைந்து பேர்தான் இருக்கும். அப்படியிருக்க, இவ்வளவு புத்திசாலித்தனமான ஒரு பெண் என் பேச்சு முழுவதையும் மூச்சுகூட விடாமல்

உன்னிப்பாய்க் கேட்டது. எனக்கு வாய்த்த பெரும் பாக்கியமல்லவா?

அன்றைய விவாதத்தை ரசித்தவர்கள் பலர் என்று எனக்குப் பின்னிட்டுத் தெரிந்தது. அதற்குப் பின் நான் பேச அழைக்கப்பட்ட கூட்டங்களில் அவள் வந்திருப்பாள் என்பது எனக்கு நிச்சயமாகிவிட்டது. அவள் பேசிய பல கூட்டங்களுக்கும் நான் போனேன். எங்கள் விவாத குணத்தைப் பயன் படுத்திக்கொண்டு எங்கள் இருவரையும் எதிர் தரப்பில் இருத்திச் சொற்போர் புரியும் படி சிலர் பணித்தனர். அத்தகைய சொற்போர்களுக்கு அமோகமான கூட்டம் கூடிற்று. நாங்கள் இருவரும் ஆர்வத்துடனும் ஆக்ரோஷத்துடனும். எங்கள் கட்சியை எடுத்துரைத்துக் கரகோஷம் பெற்றுக் களித்தோம். அந்தக் காரசாரமான விவாதங்கள் நடந்தபோதெல்லாம் எங்கள் வியப்புணர்ச்சியும் உளக் கவர்ச்சியும் ஒருங்கே வளர்ந்து வந்தது.

ஆடவர் குழாத்தை அறவே வெறுத்து அவள் பேசி வந்தாள். பெண் குலத்தை ஏசியே நான் பெயர் பெற்றேன். இடையிலே இந்தக் காந்த சக்தி என்னைக் கவர்ந்தது!

அதிகம் சொல்லுவானேன்! எங்கள் அன்பு மலர்ந்து பூத்துக் குலுங்கிப் பொங்கி நின்றது. இந்த விஷயம் என் தந்தை காதுக்கும் எட்டிவிட்டது.

தந்தையாரின் சுபாவம்தான் உங்களுக்குத் தெரியுமே! அவர் தாமாகவே சுதாமதியின் வீட்டைப்பற்றி விசாரித்தறிந்து அதைத் தேடிப்பிடித்துச் சென்று என் விவாகத்துக்கு அடிகோலிவிட்டார்!

பக்குவமாய்ப் பேசி மக்களைக் கவர்ந்து தன் வேலையை முடித்துக் கொள்வதில் என் தந்தைக்கு இணையே கிடை

யாது. அவரோடு அளவற்ற தர்க்கம் புரிந்த பின் சுதாமதி முன் போல் முரட்டுப் பிடியாய் நிற்காமல் சற்று விட்டுக் கொடுத்துப் பேசினுளாம். அவ்வளவு தான்; அவர் ஏன் நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடுவார்?

அப்புறம் என்ன? கேட்கவேண்டுமா? நல்ல சுப முகூர்த்தத்தில் திருமதி சுதாமதிக்கும் திருவாளன் சதானந்தனுக்கும் திருமணம் நடந்தேறியது! அவ்வளவுதான்!!

# 5

# சின்னஞ் சிறு சம்பவம்

திருமணம் இனிது நிறைவேறியது.

ஆனுல், அப்புறம்?

அப்புறம்தானே வாழ்க்கை தொடங்குகிறது; குடும்ப வாழ்க்கை, பொதுவாழ்க்கை இவற்றுக்கிடையே நடக்கும் போராட்டத்தை நம்மால் எப்போது உணர முடிகிறது? 'சம்சாரம் சாகரம்' என்று சொன்ன பெரியவர்கள் வாக்கு பொய்யல்ல என்று எப்போது நமக்குத் தெரிகிறது?

மணவாழ்க்கையின் மோகவெறி, கலியாணத்தின் களிப்பு — இல்லறத்தின் இனிப்பு — இவையெல்லாம் மூன்றே முக்கால் நாழிகை வாழ்வுதானே?

நாங்கள் புதுயுகத்தில் பூத்துக்குலுங்கிய புத்தம் புது மணமலர்கள். இந்த மலர்களின் மகரந்தத்தில் ஒரு தனி சுகந்தம் கலந்திருந்தது என்பது உண்மை. ஆனுல், அன் றலர்ந்த மலராலும் அதன் நறுமணம் நிலைத்துநிற்கும் என்று நம்ப முடியுமா? இன்று மலர்ந்தால் நாளையதினம்

அதன் நறுமணம் சிதைந்து மலரே வாடி வதங்கிவிட வேண்டும் என்பதல்லவா இயற்கை யன்னையின் மீறமுடியாத கட்டளை?

எங்கள் வாழ்க்கையிலும் அப்படித்தான் நேர்ந்தது!

இன்றும் என் மனைவியினிடம் எனக்கு அலுப்பு ஏற்பட்டது என்று கூற நான் தயாராயில்லை. ஆனால், வாழ்க்கையிலேயே எனக்கு ஒரு சலிப்பு ஏற்பட்டுவிட்டது.

பத்திரிகாலயத்தில் போதிய ஊதியம் கிடைத்தது. வீட்டில் சண்டை சச்சரவில்லாமல் குடும்ப வாழ்க்கை மிகவும் சுமுகமாகத்தான் நடந்து வந்தது. "கூட்டத்தில் கூடி நின்று கூவிப்பிதற்றும்" பணியையும் நாங்கள் இருவரும் கைவிட வில்லை. ஆனால், வாழ்க்கை என்பது இவ்வளவுதானா? மீண்டும் மீண்டும் சுற்றிச் சுற்றிச் சுழலும் சக்கர வளையத்தின் கதிதான் வாழ்க்கையில் மனிதன் கதியா? "எதை யெடுத்தாலும் ஒன்னரையணா, ரெண்டணா," என்று நேதாஜிபோஸ் ரோட்டில் எலம் போடுகிறானே அதேபோல் எதற்கெடுத்தாலும் ஒரே நியதி, ஒரேபோக்கு, ஒரே Routine (ரொட்டீன்)! இப்படியே வாழ நான் மனிதனா அல்லது வெறும் யந்திரசாதனமா?

'இந்த நிலையில் யாரிடமாவது சண்டையிட்டால் கூட வேடிக்கையா யிருக்கும் போலிருக்கிறதே!" என்ற ஒரு விபரீத எண்ணம் என் நெஞ்சில் உதித்தது. அதற்கேற்றபடி விரைவிலேயே எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. கிடைத்த சந்தர்ப்பத்தை நானும் நன்கு பயன் படுத்திக் கொண்டேன்.

பார்க்கப் போனால் அது என்னவோ சின்னஞ் சிறு சம்பவந்தான். ஆனால், சின்னஞ் சிறு சம்பவங்கள்தானே அனாதி காலந்தொட்டு பெருங் கலகங்களுக்கும் கலவரங்களுக்கும் அடிப்படையாய் அமைகின்றன? விளையாட்டுப்

பையன் ஒருவன் ஒரு கூனற் கிழவியின் முதுகில் உண்டை வில்லால் அடித்து விட்டு அதன் விளைவாகப் பதினன்கு வருஷம் வனவாசம் செய்யும்படி நேரவில்லையா? ஒரு கைக் குட்டையை நழுவவிட்ட சின்னஞ்சிறு சம்பவந்தான்.—அது இயாகோவின் பேரில் ஒதெல்லோ சந்தேகப் பேயால் ஆட்டப்பட்டு அந்தச் சோக நாடகத்துக்கு ஆஸ்பதமாக அமையவில்லையா?

அதுபோல் தான் என் வாழ்க்கையில் நேர்ந்த இந்தச் சின்னஞ் சிறு சம்பவமும். அந்தச் சம்பவத்தை இப்பொழுது எண்ணிப் பார்த்தால் எனக்கே சிரிப்பாகத் தான் வருகிறது. என் நண்பன்—ஆப்த நண்பன் ஆத்மராமன்—அவனும் என்னைப் போல் நன்கு படித்தவன் தான். ஆனல் என்னைப் போல் பொது மேடைகளைப் படையெடுக்க அவனுக்கு வாய்ப்புமில்லை; அதற்கான ஆர்வமும் அவனிடம் அமையவில்லை.

நான் பொது மேடைகளில் பேசிப் பிரபலமடைவதில் ஆத்மராமன் உள்ளூர ஆனந்த மடைந்தாலும் ஒருவேளை என்னைப் பார்த்துப் பொறுமைப் படுவானே என்று நான் எண்ணலானேன். ஆனல் ஆத்மராமன் எனக்குத் துரோகம் செய்வான் என்று நான் கனவிலும் கருதமாட்டேன்.

ஆத்மராமன் இப்போதெல்லாம் முன்போலவா இருக்கிறான்? எவ்வளவு மாறிவிட்டது அவன் சுபாவம்! அன்று அல்லலுற்று அவதிப்பட்டு அவல வாழ்க்கை வாழ்ந்து ஏழ்மையுடன் போராடி எளிமையுடன் காலங்கழித்த அந்த ஆத்மராமன் எங்கே, இன்று இதோ பட்டுடையும் பகட்டு நடையும் போட்டுக்கொண்டுப் பசப்பு மொழிகள் பேசிப் பரிகாசம் செய்யும் இந்த ஆத்மராமன் எங்கே! இன்றைய தினம் அவன் பார்வையிலே ஒரு கம்பீரம், அவன் பேச்சிலே ஒரு அகம்பாவம், அவன் நடையிலே ஒரு ஒய்யாரம்

இவை எப்படி அவன் வாழ்க்கையில் புகுந்தன என்பது இன்றும் எனக்குப் பெரிய புதிர்தான். மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் என்பது இத்தகைய தாரதம்மியத்துக்குத் தான் தக்க உபமானமாகப் பொருந்தும்.

எங்கள் பேச்சுகளையும் பிரசங்கங்களையும் ஆத்மராமன் அடிக்கடி கேலி செய்வான். வேண்டுமென்றே மீண்டும் மீண்டும் எங்கள் எதிரில்,

"நெஞ்சிலுரமுமின்றி, நேர்மைத்திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி,—கிளியே,
வாய்ச் சொல்லில் வீரரடி!"

என்ற அடிகளை எங்களுக்குப் பாடிக்காட்டுவான். இதைக் கேட்டுக் கோபம் கொள்ளாமல் பேதை சுதாமதி அவனுடன் சேர்ந்து சிரித்துக் கொட்டமடிப்பாள். ஒவ்வொரு சமயம் ஆத்மராமனுக்குச் சுடச்சுட "டோஸ்" கொடுக்கவேண்டும் என்னும் ஆவல் என் நெஞ்சில் பொங்கி எழும். நெடுநாளைய நட்பைத் திடீரென்று முறித்துவிடக் கூடாது என்று அஞ்சி நான் ஆவலை அடக்கிக் கொள்வேன்.

என்ன அடக்கினாலும் அகத்தினழகு முகத்தில் தெரியாது போகுமா? என் முகத்தில் காணப்பட்ட கடுகடுப்பை மறைக்க எவ்வளவோ முயன்றேன்; முயன்றும் முடியவில்லை. ஏதாவது பேசினால் பேச்சுமிஞ்சி விபரீதங்கள் விளைந்துவிடுமோ என்று அஞ்சிச் சுதாமதியிடம் கூட அதிகம் பேசாமலேயே தட்டிக்கழிக்க ஆரம்பித்தேன்.

ஆனால், எதற்காக அஞ்சி நான் பேச்சை அடக்கினேனோ அந்த விபரீதத்தைத் தடுக்க நான் சக்தியற்றவன் என்பதை இப்போதுதான் உணர்கிறேன். ஆடவர்கள் அனைவரையும் போல் நானும் ஆணவத்திமிர் கொண்டவன் தான்—பெண் ஆணுக்கு அடிமையாயிருக்கக் கடமைப்

பட்டவள் என்ற எண்ணம் கொண்டவன்தான் என்று சுதாமதி முடிவு கட்டிவிட்டாள்!

இத்தனைக்கும் என்னிடமிருந்து வெறுப்பை விளக்கும் ஒரு பேச்சோ, கோபத்தைக் காண்பிக்கும் ஒரு சொல்லோ, சுதாமதி கேட்டிருப்பாளா?

அவள் என் வாழ்வைச் சிறப்பிக்க வந்த ஒளி. திக்குத் தெரியாத காட்டில் திசை தெரியாது தத்தளித்த என்னை வழிகாட்டிக் கரையேற்றி விட்ட கலங்கரை விளக்கம். மங்கிக் கிடந்த என்னை மாணிக்கம் போல் ஜ்வலிக்கச் செய்த சுதந்திர சூரியன். அவளை அன்றும் நேசித்தேன், இன்றும் இதய பூர்வமாகக் காதலிக்கிறேன்.

ஆனால் இடையில் நேர்ந்த இந்த விசித்திரம்—எனது விபரீதப் போக்கு என்று பிறர் என்னைப் பழித்த காரணம்?

என்னைக் கேட்டுத் தெரிந்து கொள்வதைவிட சுதாமதியையே நீங்கள் நேரில் கேட்டுத் தெரிந்துக் கொண்டால் தான் உண்மை விளங்கும்.

அவளையே கேளுங்களேன்!

## இரண்டாம் பகுதி

# சுதாமதி கூறுகிறாள்.

## 1

## அந்த நாட்கள்!

ஆஹா! அந்த நாட்கள்!

ஆனந்தத்தில் அமிழ்ந்து, இன்பத்தின் எல்லையைக் கரைகண்டு களித்து, காணும் காட்சி, கேட்கும் பேச்சு, நுகரும் மணம், ஸ்பரிசிக்கும் வஸ்துக்கள் எதிலுமே ஒரு தனிச்சோபை படர்ந்திருப்பதாய் நான் எண்ணி எண்ணி இறும்பூதெய்திய அந்த நாட்கள்!

அந்த இன்ப நாட்களைப் போல் இனியும் என் வாழ்க்கையில் நான் காணப் போகிறேனா? மீண்டும் அந்த நாட்கள் தான் எனக்கு இந்தவாழ்க்கையில் திரும்பி வரப் போகின்றதா?

ஆனால் ஒன்று; அந்தக் காலமெல்லாம் எனக்குக் காதல் என்ற பேச்சே கட்டோடு பிடிக்காது. "காதல் என்பது வெறும் கட்டுக்கதை; கற்பனை; கதாசிரியர்கள் தங்கள் கதைகளுக்குச் சுவையூட்டுவதற்கு உபயோகித்துக் கொண்ட ஒரு சாதனம்; நாவலாசிரியர்கள் நம்மை நம்ப வைப்பதற்காகத் திரிக்கும் புரளி," என்றெல்லாம் நான்

எண்ணி வந்த காலம் அது. எவ்வளவோ விஷயங்களில் அமரகவி பாரதியாரின் அற்புதப் பாடல்களில் நான் அமிதமாய் ஈடுபட்டு வந்தேன். ஆனால், இந்தக் காதல் விஷயத்தை அவர் கையாண்ட முறையை நான் வெறுத்தேன். பாரதியாரின் குயில்,

“ காதல், காதல். காதல்—
காதல் போயில், காதல் போயில்,
சாதல், சாதல், சாதல்!”

என்றெல்லாம் பாடுவது வெறும் பிதற்றல் என்று தான் எனக்குத் தோன்றும்.

இந்த ஆடவர்களில் பலர் அசட்டுச் சிரிப்புடனும் அர்த்தமற்ற கெஞ்சுதல்களுடனும் என்னுடன் வலிய வந்து பேச முற்படும்போது அவர்களைச் சுட்டெரித்து விடுவது போல் நான் பார்ப்பேன். இந்த மாதிரி ஒரு நாலு ஆண்கள் அசட்டுபிசட்டென்று நடந்து கொள்வதால் பெண்களே வெளியில் கிளம்பக் கூடாது என்று பெண்களும் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்களே, இந்தக் கூத்தை நான் என்னவென்று சொல்லுவேன்? இத்தகைய காரணங்களால் ஆண் குலத்தின் மீதே நான் ஒரு தனி வெறுப்பு கொண்டுவிட்டேன்.

ஆனால், இந்த மனோபாவம் வெகு நாட்கள் நீடித்திருக்கவில்லை. அவர் என் வாழ்க்கையில் அப்படி விழுந்தடித்துக்கொண்டு வந்து புகுந்தது முதல், என் மனத்தில் விவரிக்க வொண்ணாத ஒரு புத்துணர்ச்சி பிறந்து விதவிதமான எண்ண அலைகளைக் கிளப்பிவிட்டது. கொந்தளிக்கும் இந்த அலைகடலின் அடியில், ஆழத்தின் அமைதியில் தோன்றிய அந்த அழகிய முத்து தான் காதல் என்னும் உணர்ச்சி போலும்!

'கண்டதும் காதல்' என்ற மேனாட்டு நாகரிக முறைக்கும் இந்த அதிசயமான புத்துணர்ச்சிக்கும் எவ்வளவு வித்தியாசம்! முதலில் அவரை அன்று கண்டபோது நான் காதலா கொண்டேன்? "பெண்ணென்றால் பேயும் இறங்கும்" என்று சொல்லுவார்கள்; ஆனால், பெண்ணென்று கூடப் பார்க்காமல் பேய் அறைவது போல் என்னைப் பிடித்துத் தள்ளிவிட்டுத் தனக்கு முதலில் பஸ்ஸில் இடத்தைத் தேடிக்கொண்டு ஓடிவிட்ட அவர் மீதா எனக்குக் 'கண்டதும் காதல்' ஏற்படும்? அவர்மீது அன்று எனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தைச் சொல்லிமுடியுமா?

அன்றைய கூட்டத்தில் ஆடவர் குழாத்தையே அலசி அலசி நான் பேசிய ஏச்சும் பேச்சும் அவருக்கு எப்படி சுருக்கென்று தைத்துவிட்டன பார்த்தீர்களா? இருந்தாலும், எதிர் கட்சியைத்தான் அவர் என்ன வலுவாக எடுத்துச் சொன்னார்! ஆணித்தரமான அவரது பேச்சு என் வாதங்களை யெல்லாம் மடக்கிவிட்டதே! அவர் சொற்பொழிவு என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது என்பதில் சந்தேகமென்ன?

மேனாட்டு முறைகளில் அமெரிக்க ஜட்ஜ் லிண்ட்ஸே போன்றவர்கள் பெரிதும் ஆதரித்துப் போற்றும் 'கம்பானியேட்கலியாணம்' (Companionate Marriage) என்பதைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஆணும் பெண்ணும் சில காலம் பரீட்சார்த்தமாகக் கூடியிருந்து அவர்கள் மனம் ஒன்றுபட்டால் மணம் புரிந்து கொண்டு தாம்பத்திய வாழ்க்கை நடத்துவது; மனம் ஒப்பாவிட்டால் பிரிந்துவிடுவது. இதுதான் 'நட்பு மணம்' அல்லது 'கம்பானியனேட் கலியாணம்' என்று அழைக்கப்படுகிறது.

எங்கள் வாழ்க்கையும் ஒரளவுக்கு இதை ஒட்டிதான் நடந்தது. பேச்சு மேடையில் பல இடங்களில் நாங்கள் பழகினோம். எங்கள் மனம் ஒன்றுக்கொன்று கவரலா

விற்று. திடீரென்று ஒரு நாள் நான் சிறிதும் எதிர்பா ராத போது அவரை மணக்க எனக்கு சம்மதம்தானா என்று என் தந்தை கேட்கவே நான் திகைத்துப் போய் விட்டேன். அப்போது என் உள்ளத்தில் உதித்த அந்த இன்பக் கலவரத்தை என்னால் சரியாக வருணிக்க இயலவில்லையே! என் முகக்குறி கொண்டே அகக் குறிப்பை உணர்ந்து தந்தையாரும் திருமணத்துக்கு ஏற் பாடுகள் செய்துவிட்டார்.

ஆயிரக் கணக்கான மக்களின் முன்பு அநாயாசமாகப் பிரசங்க மாரிகள் பலவற்றைப் பொழிந்து தள்ளினவள் தான் நான். இருந்தாலும், விவாகம் என்றதும் ஏன் அப் படி என்னையும் அறியாமல் ஒரு நாணம் ஏற்பட்டதோ! அந்த நாணத்திலும் நான் ஒருவித கவர்ச்சியையல்லவா கண்டேன்? சதானந்தனைப் பொறுத்தவரையில் என் வெறுப்புணர்ச்சி யெல்லாம் எங்கேயோ பறந்தோடி விட்டது.

மணப்பந்தலில் மணமகனின் அருகில் உட்கார்ந்தி ருந்த போது என்னைக் கவனித்த தோழிகளில் பலர் தங் கள் கேலிகளையும் சற்று மறந்து எனக்கு ஆறுதல் கூற வல்லவா புறப்பட்டுவிட்டனர்! எதிர் காலத்தைப்பற்றிய எண்ணங்கள் மனத்தில் வட்டமிட்டுச் சுழன்றபோது ஏன் இப்படி ஏதேதோ விவரிக்க முடியாத பயங்கள் மனத்தில் தோன்றிக் குழப்புகின்றன? மணப் பந்தலில் ஆண் மக னுக்கு வாழ்க்கைப்படவிருக்கும் ஒவ்வொரு வனிதைக் கும் இத்தகைய நடுக்கம் இயற்கையாகவே உதிக்கின்றதா? இல்லாவிட்டால் என் உடலா அப்படிச்சிலிர்க்கும்?

ஆனால், நான் அச்சப்படவேண்டிய அவசியமே இல்லை என்பதை வெகு சீக்கிரத்திலேயே உணர்ந்தேன். விவாகம் என்பது எனக்கு ஒரு விலங்காக வந்து வாய்க்க வில்லை. பலரைப் போல் பெண்டாட்டியையும் தனது

தனிச் சொத்தென்று கருதி என் மீது உரிமை பாராட்ட என் கணவர் முன் வரவில்லை. தம்பதிகள் ஆகி விட்ட பின்னும் நாங்கள் பொதுக் கூட்டங்களில் பேசுவதை விடவில்லை. மேலும், அநேகமாக ஒருவருக்கொருவர் எதிர்க் கட்சியாகவே பேசியும் வந்தோம்!

இதைவிட வேறு பாக்கியம் பெண்ணாய்ப் பிறந்த எவளுக்காவது கிடைக்கக் கூடுமா? நாளுக்கு நாள் எங்களிடையே இருந்த அன்புத்தளை எங்களை இறுகப் பிணைத்து வந்தது.

இறுகப் பிணைத்த தளை தான் அப்படி பமீர் என்று எதிர்பாராத வகையில் அறுபட்டுவிட்டது!

# 2

# தளை முறிந்தது!

அன்பு என்னும் பாசம் ஒரு மெல்லிய பட்டுக்கயிறு. தளர்த்திப் பிடித்தால் அதன் தகதகாயமான ஒளி சுற்றியுள்ளவர்களைப் பிரமிக்கவைக்கிறது. ஆனால், அளவுக்கு மிஞ்சி இறுகப் பிடித்துக் கட்ட ஆரம்பித்தால் அது 'பமீர்' என்று அறுந்து விடுகிறது!

ஆணையும் பெண்ணையும் அற்புதமாகப் பிணைத்து வைக்கும் இந்த மாயக்கயிறு அறுபட்டு விட்டால் உடனே அது இருந்த இடத்தில் கெட்டியான இரும்புத்தளை யல்லவா தோன்றி இறுகப் பிணைக்கத் தொடங்கிவிடுகிறது! கட்டுப்பாடு என்னும் அந்த இரும்புத்தளைக்குத் தான் என்ன கனம ஏற்பட்டிருக்கிறது!

இரும்புத்தளைகள் தான்—கருத்த, கனத்த, பெருத்த இரும்புத்தளைகள்! ஆனால், இவற்றை நானேயல்லவா

மாட்டிக்கொண்டேன்! வேண்டி வேண்டிப் பூட்டிக்கொண்டேன்! என் மனம் தாகூரின் கீதாஞ்சலிப்பாடல் ஒன்றைத் தாவிப்பிடித்து ஒப்புவமை கண்டது.

"கைதியே! உடைக்க முடியாத இந்த இரும்புச் சங்கிலியை இறுத்தியது யார் கூறு!" என்று கேள்வி போட்டு அதில் அதற்குக் கைதி, "நான்தான்" என்று விடையளிக்கிறான். மேலும் கைதி கதறுகிறான்:—"வெகு ஜாக்கிரதையாய் இதைக் கோத்தேன். அசைக்க முடியாத எனது அனந்த சக்தி உலகத்தையே சிறையிட்டு எனக்குச் சந்தடியற்ற சுதந்திரம் தரும் என்று எண்ணினேன். இரவும் பகலுமாய், பெரும் தீயும் கனத்த கொடும் சம்மட்டியும் கொண்டு இந்தச் சங்கிலியைச் செய்தேன். கடைசியில், வேலை முடிந்து, கணுக்கள் ஒன்றும் உடைக்க முடியாதபடி செய்தபின்னர் அதன் பிடியில் நான் இருக்கக் கண்டேன்!"

ஆமாம்; என்னைப் பொருத்த வரையில் காதல் என்பது ஒரு வியாதியாகவும் கலியாணம் என்பது அதற்கு மருந்தாகவும் தான் ஆகிவிட்டது. மருந்தைக் குடித்த பின்பும் சிறிதுகாலம் காதல் சுரத்தின் கடுமை தணியாது தான் இருந்தது. ஆனால், வெகு விரைவில் காதல் என்னும் அந்த நோய் என்னை விட்டோடி விட்டது. மீண்டும் நான் காதலைக காணக் கதைகளைத் தான் படிக்க வேண்டியிருந்தது.

தவறு என் மீது தான் என்று ஒப்புக்கொள்ள நான் தயங்கவில்லை. மணப்பந்தலில் என்மனத்தில் எழுந்த அச்சங்களுக்கு ஆதரவில்லாமல் போகவில்லை மண விலங்கில் மாட்டிக் கொண்டபின் குடும்பப்புயல்களுக்கும் ஆணவப்பூசல்களுக்கும் வளைந்து கொடுப்பதைத் தவிர வழி என்ன?

என்னதான் உலகத்தார் முன்னிலையில் தான்தான் தாராள மனப்பான்மையுடன் இருப்பதுபோல் காட்டிக் கொண்டாலும், அதற்காகப் பலவித பாசாங்குகள் செய்து வேஷம் போட்டாலும் என் காதற் கணவரது உள்ளத்தில் ஊசலாடிய சஞ்சலப் பேயைத் தெரிந்து கொள்ள நான் என்ன அப்படி அடியோடு சக்தி அற்றவளா? அடிக்கடி ஆத்மராமன் பேச்சு அவரைச் சந்தேகத்தில் ஆழ்த்தியதை தான் நான் அறியமாட்டேனு?

இருந்தாலும், இப்படியும் ஒரு புருஷர் இருப்பாரோ? என்மீது அவர் சந்தேகப்படுவதோ தெரிகிறது. அதை நேரில் எடுத்துக்கூறி என்னைக் கேட்க அவர் ஏன் அஞ்சவேண்டுமோ தெரியவில்லையே! அப்படி எதாவது என்னைக் கேட்கமாட்டாரா, கேட்டதும் கேட்காததும் வெட்டு ஒன்று, துண்டு இரண்டாய் நாமும் ஏதாவது தேங்காய் உடைப்பது போல் பட் என்று பதில் சொல்ல மாட்டோமா என்று என் மனம் தான் என்ன பதை பதைத்தது! ஆனுல், அதற்கு அவர் ஒரு சந்தர்ப்பம் அளித்தால் தானே; அவர் பாட்டுக்கு எங்கள் வாழ்க்கையில் ஒன்றுமே நடக்காததுபோல் தம் வேலைகளையெல்லாம் சரிவர ஒழுங்காக நடத்திவந்தார். இந்த நிலையில் அவர் மீது நான் ஏதாவது குற்றஞ் சாட்டிக் குறை கூறினுலும் இந்தப் பாழாய்ப்போன உலகம் என்னை அபாண்டமான பழி சொல்பவள் என்று பழிக்காதா?

இத்தனைக்கும் அந்த ஆத்மராமனை அவரே தான் அழைத்து வந்து எனக்கு அறிமுகம் செய்வித்தார். அறிமுகம் செய்ததுடன் நின்ருரா, அவன்தான் தன் ஆத்ம நண்பன் என்று கூறி அவனைப்பற்றி ஒரு அத்தியாயம் வானளாவப் புகழ்ந்து கூறி அவனைப்போல் நல்லவன் இன்னொருவன் இந்த உலகம் பூராவும் சல்லடை போட்டுத் தேடினுல் கூட அகப்படமாட்டான் என்றெல்லாம் சொன்னுர்.

எனக்கென்னமோ ஆத்மராமனுடைய பட்டுடையும் பகட்டு நடையும் கட்டோடு பிடிக்கவில்லை. ஆனால் அவனுடைய வீரதீரமான பேச்சுகளும் காரசாரமான வாதங்களும் என்னை வசீகரித்தன என்பது உண்மை. 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று துணிந்து கூறின நக்கீரர்மரபில் வந்த நற்றமிழ் நங்கையல்லவா நானும்? ஒளிவு மறைவில்லாமல் உங்களிடம் உண்மையை உரைக்க எனக்கென்ன பயம்? சில சமயம் அவன் நட்புரிமை பாராட்டி என் கணவரைக் கேலி செய்தபோது நானும் அவனுடன் அந்தக் கேலியில் கலந்துகொள்வேன். நண்பன் கேலி செய்ய உரிமை பாராட்டினால் மனைவிக்குமட்டும் அந்த உரிமை மறுக்கப் பட வேண்டும் என்றுகூட ஒரு நியதியா?

ஆனால், என் கேலியைக் கண்டு ஏன் இப்படி அவர் முகத்தில் அசடு வழியவேண்டும்! வரவர என்னுடன் பேசுவது கூட அவருக்கு வேம்பாகப் போய்விட்டதன் காரணம் தான் என்ன?

சமுத்திரக்கரையில், அலைகடலின் கொந்தளிக்கும் ஓசையைக் கவனித்த வண்ணம் இருவரும் நிலவொளியின் இயற்கை எழிலையும் நீலத்திரைக்கடலின் ஓலத்தின் உயர்வையும் பற்றிக்கூட அர்த்தமில்லாமல் மணிக்கணக்கில் பேசிக்கொண்டே போன எங்களுக்கிடையில் இன்று மட்டும் பேசுவதற்கு ஒரு விஷயமுமில்லாமல் உலகமே அப்படி அஸ்தமித்து விட்டதா?

ஒரே வார்த்தையில் சொல்லப் போனால் காதல் அவருக்குக் கசந்தது என்பதுதானே உண்மை? முகர்ந்த மலர் வாடிவிடுகிறது; வாடினமலரை வருடிப் பார்ப்பதில் பலனென்ன? அதைத் தூக்கித்தூர எறிந்து விடுவதுதான் மனித சுபாவம். இல்லாவிட்டால் கையிலே வைத்து அதைக் கசக்கிப்பிழிவதும் மனித சுபாவம். ஆனால்,

மலர் வாடிவிட்டதே என்று மனத்தில் ஏங்கி, "இதை நாம் போற்ற வேண்டியது கடனல்லவா?" என்று கருதிப் பூஜை அறையில் வைத்து விட்டால் மட்டும் போதுமா? மலரின் மகரந்தம் மீண்டும் தோன்றிவிடுமா?

ஏதோ பிதற்றுகிறேன் என்கிறீர்களா? ஆம். இந்த அர்த்தமற்ற சஞ்சலங்கள் தோன்றியதற்குக் காரணமான ஆத்மராமன் தான் அவற்றைத் தீர்த்து வைக்கவேண்டும். இந்த விபரீத விளைவுகளுக்கு மாற்று காண அவரது சாமார்த்தியம் தான் உதவியது.

அந்தக் கதையைப் பற்றி ஆத்ம ராமனையே கேளுங்கள்!

## மூன்றும் பகுதி

# ஆத்மராமன் உரைக்கிறான்.

## 1

## மனக்கலக்கம்

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு"

என்ற பொய்யா மொழியில்தான் எவ்வளவு பொருள் பொதிந்திருக்கிறது! உண்மையில் எனது நண்பனுடைய தாம்பத்திய வாழ்க்கை இப்படிக்காரணமின்றிக் கரடு முரடான பாதையில் போய்க் கொண்டிருப்பதைக் கண் கொண்டு பார்த்தும் நான் வாளா விருத்தல் பாவமல்லவா?

ஏனோ எனக்கு இந்தக் கெடுமதி வந்தது! நான் ஏன் அப்படி வலுவில் புகுந்து அவர்கள் வாழ்க்கையைப் பாழடிக்கும்படி நேர வேண்டும்? நீட்சேயின் சித்தாந் தத்தையும் சங்கரரின் மாயா வாதத்தையும் ப்ளேட்டோ வின் குடியரசையும் கரைத்துக் குடித்த எனக்கு மனித சுபாவத்தின் அடிப்படையான தத்துவம் மட்டும் தெரியா மல் போய் விட்டதே, இதென்ன விந்தை?

எப்படியோ இந்தத் தம்பதிகளிடையில் சஞ்சலப் பேய் வந்து குடி கொண்டு விட்டது. சதானந்தனோ ஒரு அப்பாவி; அறிஞனுனும், என்னதான் மார் தட்டிப்

பேசினாலும், மனத்தில் மட்டும் ஒரு கோழை! சுதாமதியோ ஒரு வெகுளி, அவளுக்கு வெளுத்ததெல்லாம் பால். கருத்த சாமானையோ அவள் கண் கொண்டும் பார்ப்பதில்லை! உலகத்தில் பொய்யும் பித்தலாட்டமும் சூதும் வாதும், உருட்டும் பிரட்டும் மலிந்து கிடப்பதை அவள் அறியாதது மட்டுமல்ல; அப்படி இருப்பதாகச் சொன்னாலும் அவள் நம்பவே மாட்டாள்.

கல்லூரி நண்பன் என்ற ஹோதாவில் நான் முன்னிருந்தபடியே அவனுடன் சிரித்தும் கேலிசெய்தும் கொம்மாள மடித்தால் இந்தப் பேதைப்பெண் சும்மாவிருக்கப்படாதா? இப்படி வலியவந்து எங்கள் சம்பாஷணையில் புகுந்து தன் முகத்தில் தானே சேற்றை வாரிப் பூசிக் கொள்வாளா?

ஏதோ வேடிக்கைப் போக்கில் அவன் தேச பக்தியை நான் ஏளனம் செய்யப்போய் அதன் விளைவாக இந்த விபரீதமெல்லாம் நேரவேண்டுமா?

'தேசபக்தி! தேசபக்தி!' என்று பலர் பிதற்றுகிறார்களே, உண்மையில் இதற்கு என்ன அர்த்தம் என்று எனக்கு என்றும் சரியாகப் புரிந்ததில்லை. ஆதிகாலம் தொட்டு தெய்வம் என்ற ஒரு மந்திர ஜாலத்தைவைத்துக் கொண்டு பக்தி, பயம், பாவம், புண்ணியம என்றெல்லாம் மக்களை மிரட்டிப் பூசாரிகள் தங்கள் ஆதிக்கத்தை ஸ்தாபித்துக் கொண்டது போலத்தான் இன்றைய புது உலகத்தில் இந்தத் தேசபக்தி, தியாகம், தேசத் துரோகம், முதலான சொற்களை உபயோகித்து ஒரு புது முதலாளித்துவம் கிளம்பி வருகின்றது.

அரைவயிற்றுக் கஞ்சிக்கு அழுது தவிக்கும் அந்த ஏழைக் குடியானவன் தேசத்தைக் கண்டானா பாசத்தைக் கண்டானா? அவன் பெயரைச் சொல்லி ஓட்டுகள் வாங்கிப் பலர் பிரபல மடைவதைத்தான் அவன் காண்கிறான்!

நிதரிசனமான இந்த உண்மைகளை யெல்லாம் பட்ட வர்த்தனமாக எடுத்துரைத்தால் எந்த 'தேசபக்த' னுக்குத் தான் கோபம் வராது?

உண்மையில் என்னைச் சதானந்தன் அடியோடு வெறுத்து ஒதுக்கித் தள்ளாததற்குக் காரணம் என் மீது அவனுக்கிருந்த அளவு கடந்த வாஞ்சையே அன்றி வேறில்லை. இவ்வளவு தூரம் துணிந்து அவனை நான் கேலி செய்தும் அவன் என்னை ஒரு இழி சொல் சொல்லவில்லை. இடித்துக் கூறவில்லை; பழிக்கவில்லை; எவ்விதப் பதற்றமும் காட்டவில்லை.

ஆனல், முகஸ்துதியை மட்டும் எதிர்பார்த்து நண்ப னிடம் உண்மையை எடுத்துரைக்காது மறைத்தல் பாவ மல்லவா? ஆகவேதான் என்மனத்தில் தோன்றியவற்றை மறைக்காது பளிச் பளிச்சென்று எடுத்துரைத்தேன்.

அன்றைய பேச்சினிடையில் அவன் முகத்தில் அறை வது போலதான் அமைந்துவிட்டது எனது மேற்கோள். "தேசபக்தி என்பது போக்கிரியின் கடைசி அடைக்கலம்" (Patriotism is the last refuge of a scoundrel) என் னும் டாக்டர் ஜான்ஸன் வாசகியத்தையல்லவா நான் அவன் முகத்தில் தூக்கி எறிந்தேன்!

அதற்குமா ஒரு பேதைப்பெண் "ஆமாம்" போடு வாள்? அவளுந்தானே 'தேசபக்தி'யால் உந்தப்பட்டு மகத் தான மேடைப் பிரசங்கங்கள் மூலம் அரிய தொண் டாற்றி வருவதாக மனப்பால் குடித்து வருகிருள்? தனக் காகவாவது என்னை எதிர்த்துப் பேசக்கடமைப் பட்டவ ளல்லவா அவள்? என்னுடன் அவளும் சேர்ந்து ஒத்துப் பாடுவதைப் பார்த்தால் சதானந்தனை அழ வைக்க வேண் டும், அலற வைக்க வேண்டும், என்ற ஒரே நோக்கத் துடனே யல்லவா அவள் பேசுவதாகத் தோன்றுகிறது?

இந்நிலையில் அவள் மேல் சதானந்தன் சந்தேகம் கொண்டாலும் அதில் என்ன தவறு இருக்கிறது? ஆனால், அவன் சந்தேகம் கொண்டதாகவே என் மனதுக்குப்பட வில்லையே! மனோதத்துவ ஆராய்ச்சியில் நான் புத்தகப் படிப்போடுமட்டும் நின்று விடவில்லை. மனிதர் மனம் என்னும் திறந்த புத்தகத்தையும் சிறிதளவு அறிந்து வைத்திருந்தேன். சதானந்தன் உள்ளத்தில் சந்தேகக் குமுறல் கள் இருந்திருந்தால் நான் அதை அவசியம் அறிந்திருப் பேன்.

அவன் மனதில் லவலேசமும் சந்தேகமில்லை; அவள், மனதில் எத்தகைய மாசுமில்லை. களங்கமற்ற அக்காரிகை கள்ளங்கபடறியாத அந்த பேதைப் பெண், அவன் தன்னைச் சந்தேகிப்பதாக எண்ணி எண்ணி ஏங்குகிறாள். இதை யொட்டி தீவிரமான சம்பவமோ குடும்பச் சண்டையோ ஒன்றும் ஏற்படாததால் மெல்லவும் மாட்டாமல் முழுங் கவும் மாட்டாமல் தவிக்கிறாள்!

சில தினங்களாகவே சதானந்தனின் போக்கும் விசித்திரமாகத்தான் தென்படுகிறது. இந்தச் சலிப்பைத் தீர்க்க ஏதாவது ஒரு வழி செய்தால்தான் அவர்கள் கஷ் டம் நீங்கும். இதைச் செய்ய என்னால் ஆகாவிட்டால் வேறு யாரால் தான் அவர்களைப் பிணைத்து வைக்க முடியும்?

# 2

## உல்லாசப் பயணம்

இந்தத் திவ்விய தம்பதிகளின் பிணக்கைத் தீர்த்து வைக்க எனக்கு ஒரே வழிதான் தோன்றியது; அதாவது அவர்களைச் சிறிது காலம் பிரித்து வைத்து அவர்கள் மனம் ஒருவரை ஒருவர் காணமாட்டோமா என்று ஏங்கு

மாறு செய்தல். ஆனால், ஒருவேளை, சதானந்தன் "சனியன் ஒழிந்தது; அவள் தொந்தரவில்லாமல் நான் நிம்மதியாய் இருக்கிறேன்" என்று முடிவு செய்துவிட்டால் என்பாடு திண்டாட்டம் தான்! ஆகவே அவர்களைப் பிரித்து வைத்தாலும் அவனுடன் நான் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

அதற்காக அவனும் நானும் எங்காவது வேற்றாருக்கு உல்லாசப் பயணம் சென்று தங்கியிருத்தல் நலம் என்று தீர்மானித்தேன். என் மனத்தில் நான் தீர்மானித்துவிட்டால் என்ன ஆகிவிடும்? யாரோ 'பாதி கலியாணம் ஆன மாதிரி' என்று ஒன்றுமே ஏற்பாடு செய்யாமல் சொன்னார்களாமே அது மாதிரிதான் இருக்கிறது என் தீர்மானமும்!

இந்த எழவெடுத்த குமாஸ்தா வேலையில் புகுந்து விட்டால் ஒரு மாதம் ஓய்வு பெற எவ்வளவு பேரைக் கெஞ்சிக் காக்காய் பிடிக்க வேண்டியிருக்கிறது! கல்லூரியில் படித்த நாளில் எனக்கிருந்த தன்மான உணர்ச்சி இன்று இருந்தால் நானும் பொது மேடைகளில் பிரசங்கம் ஆற்றும் பணியில் இறங்கிவிட்டிருப்பேனே என்னவோ? ஆனால் இரண்டாண்டுகளாய் வேலையின்றி நான் பட்ட பாட்டில் இப்போது காரியம் ஆகவேண்டுமென்றால் யார் காலையும் பிடிக்கத் தயாராகிவிட்டேன்.

ஆகவே, காக்காய் பிடிக்கும் கலையில் வெற்றி எனக்குத்தான்; ஒருமாத விடுமுறை கிடைத்துவிட்டது. அந்த ஒரு மாதம் சதானந்தனை விடுமுறை எடுத்துக் கொள்ளச் செய்வது எளிய காரியமாகவே முடிந்தது. அவனுக்கென்ன—ஆபீஸ் முழுவதுமே அவனைக்கண்டு அலறுகிறது. பத்திரிகாலயச் சொந்தக்காரருக்கு வேண்டியவன் என்ற பெயர் ஒன்றே போதும்; கூடவே அவனதுபுத்தி கூர்மையும் அருங்குணங்களும் அவனை ஆபீசுக்கே ஒரு அணிகலனாக்கிவிட்டது

ஆனால் அவன் சுதாமதியுடன்தான் கிளம்புவேன் என்று பிடிவாதம் பிடிக்கத் தொடங்கிவிட்டான்! சுதாமதியின் உடல் நிலை ஒருவாறு இருப்பதை அவனுக்கு எடுத்துச் சொல்லிச் சில காலம் அவளைத் தனியே ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்லியும் வீட்டைக் காவல் காக்கும்படியும் செய்தல் நலமென்றும், இந்த நாட்களில் வீட்டைப் பூட்டிக்கொண்டு எல்லாருமே வெளியூருக்குப் போகக் கூடாதென்றும் சொல்லி ஒருவாறு அவனை என்னுடன் கிளம்பச் சம்மதிக்கும்படிச் செய்தேன்.

உண்மையில், உல்லாசப்பயணம் என்றால் இப்படி இரு நண்பர்கள் சேர்ந்து உலகத்துக் கவலைகளை யெல்லாம் உதறித் தள்ளிவிட்டுக் கிளம்பினால்தான் அது மனத்துக்குச் சந்துஷ்டியளிக்கிறது! ரயில் பிரயாணத்தில் தனிமையைக் கழிக்கவேண்டுமே என்று கவலைப்பட்டுத் துப்பறியும் நாவல்களைத் தேடுவதை விட இந்த மாதிரி இணையற்ற நண்பன் ஒருவனுடன் கூடி எதிரில் வேகமாகத் தோன்றி மறையும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு அனுபவிப்பதிலும் பிறரைக் குறித்து ஹேஷ்யமும் வம்பளப்பும் பேசிக் காலம் தள்ளுவதிலும் எவ்வளவு இன்பம் கிடைக்கிறது!

நாங்கள் கிளம்புவதற்கு முன் ரயிலடியில் சுதாமதி விடை கொடுத்தனுப்ப வந்திருந்தபோதே அவர்களுடைய அன்புப் பிணைப்பு, அந்த அதிசய தம்பதிகளின் அற்புதக் காதற் பாசம், எனக்கு நன்கு விளங்கிவிட்டது. பரிந்து பரிந்து தன் கணவனுக்கு இல்லாத உபதேசங்களை யெல்லாம் அவள் எடுத்து ஓதியதும் அவற்றை யெல்லாம் வியப்புடனும் கனிப்புடனும் எதிர் மொழி ஒன்று கூடக் கூறாமல் அவன் அளவு கடந்த ஆர்வத்துடன் கேட்டதையும் நான் வைத்த கண் வாங்காமலும் கேட்ட செவி கலங்காமலும் பார்த்தும் கேட்டும் அனுபவித்து ஆனந்தித்தேன்.

எங்கள் பிரயாணத்தில் நாங்கள் எங்கெங்கோ சுற்றி அலைந்தோம். இன்ன இடம்தான் செல்வதென்ற ஒரு நியதி

யின்றி இங்குமங்குமாய் அலைந்து திரிந்தோம். கட்டிப் பிடிப்பார் யாருமின்றி, தட்டுத்தடைகள் எதுவும் இல்லாமல் எங்கள் மனம்போன போக்கெல்லாம் சுயேச்சையாகத் திரிந்தோம்.

ஆனால், நான் அடைந்த நிம்மதியையும் அனுபவித்த ஆனந்தத்தையும் சதானந்தன் பெற்றான் என்றால் அது தானே கிடையாது! அடிக்கடி கவலைச்சுழல் அவன் மனத்தை வாட்டி வதக்கி எடுத்து விட்டது.

சுதாமதியைப்பற்றி அரைமணிக்கு ஒருதரம் ஏதாவது சொல்லாவிட்டால் அவனுக்கு இருப்புக் கொள்ளாது. அடிக்கடி "திரும்பிப் போய்விட்டால் நல்லது போலிருக்கிறதே" என்பான். அவனை ஆறுதல் கூறி அழைத்துப் போய் அழகான இடங்களைக் காட்டி அவனைக் களிப்பில் ஆழ்த்த நான் அரும் பாடுபட்டேன்.

# 3

# வேதனையா, இன்பமா?

நல்ல பயணம் தான் செய்தேன் நான் நண்பன் சதானந்தனை நம்பி அழைத்து கொண்டுபோய்!

"இத்தனை நேரம் சுதாமதி இலக்கியக் குவியலில் புகுந்து மதிப்பற்ற மாணிக்கங்களைத் தேடிப்பிடிக்கும் இணையற்ற வேலையில் ஈடுபட்டிருப்பாளல்லவா?" என்று கேட்பான் ஒரு சமயம்.

மாலை வந்து விட்டாலோ, என்பாடு ஆபத்துதான். காதைத் தீட்டிக்கொண்டு அவனது அழகிய வருணனைகளை ரசிக்க என்னை நான் தயார் செய்து கொண்டால் தான்

ஆயிற்று. இல்லாவிட்டால் என்ன அவன் லேசில் விடமாட்டான்.

"சுதாமதியைப் பற்றி நான் பேசினால் உனக்கு ஏனப்பா இந்த உதாசீனம்?" என்று கேட்க ஆரம்பித்து விடுவான் சதானந்தன். இந்த சதானந்தனா அவள் என் மீது அதிகமாய் கவனம் செலுத்துகிறாளே என்று சந்தே கித்திருப்பான்? அப்படியாக அவன் சந்தேகித்திருந் தாலும் அந்தக்காலம் மலையேறி விட்டது என்பதில் இனியும் நான் சந்தேகப்படுவேனா?

" காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரு மிந்நோய்"

என்னும் வள்ளுவர் வாக்குக்கு ஒப்ப மாலை வேளை களில் சதானந்தன் படும் வேதனையைக் காணக்காண என்பாடு ஏனடா அப்பா இவனை அழைத்து வந்தோம் என்று ஆகிவிட்டது.

ஓய்வுத்திட்டம் போட்ட ஒருமாதம் முடியுமுன் னேயே நாங்கள் சென்னைக்குத் திரும்பி வந்துவிட்டோம்.

அப்புறம் பார்க்கவேண்டுமே அந்த திவ்வியதம்பதி களின் ஆனந்த பரவசத்தை! உண்மையில், இடையில் தோன்றிய வேதனையும் ஒருவகை இன்பம்தான் என்பது கூட நிதரிசனமாகிவிட்டது. சுதாமதயும இப்போ தெல்லாம எவ்வளவு மாறிப்போய் விட்டாள்! சதானந்தன் சொல்லும் ஒவ்வொரு சொல்லையும அவள் எவ்வளவு ஆவ லோடும் ஆர்வத்தோடும் கேட்டு ரசித்தாள்!

பிரயாணத்தின் போது ஏதோ மரக்கட்டை போன்று ஒன்றிலும் இருப்பு கொள்ளாது உன்மத்தனாய் வந்த சதானந்தன் தான எவவளவு ஜோராக—என்ன குதூகலத்துடன்—தன் பிரயாண அனுபவங்களையெல்லாம் எடுத்துரைத்து அவளை இன்புறச் செய்தான்!

எது எப்படியாவது போகட்டும்; இந்த இணையற்ற தம்பதிகள் இனி ஒற்றுமையாக வாழ்வார்கள் என்பது உறுதியாகி விட்டது. இப்படி இவர்களைச் சேர்த்து வைத்தது என் முயற்சிதான் என்பதில் எனக்கு எவ்வளவோ பெருமை. ஆனால், இவர்களைச் சேர்த்து வைத்தவன் நான் என்ற உண்மையை இவர்கள் உணராமல் இருத்தலே நலம்.

ஆனால், உண்மையை ஊடுருவிப் பார்க்கும் சூட்சும புத்தி அவர்களிடம் சூனியமாகி விட்டது என்று கருத நான் யார்?

உண்மை! எது உண்மை?

சதானந்தனும் சுதாமதியும் நடத்திய காதல் வாழ்க்கைதான் உண்மையா?

அப்படியானால் உலகத்தை ஒன்றுபடுத்தும் உத்தம நோக்கம் கொண்டு பணியாற்றிய இவ்விரு தம்பதிகளையும் ஒன்று படுத்தவே ஒரு பிளவு வேண்டியிருந்ததே, அதேன்?

மற்றவர்களை ஒற்றுமையாயிருக்க அறை கூவி அழைத்த இந்த இளம் தம்பதிகள் தங்களுக்குள்ளேயே ஒருவித ஒற்றுமை ஏற்படவில்லை என்பதையாவது உணர்ந்திருப்பார்களா?

அவர்களிடையில் பிளவை உண்டு பண்ணியவனும் நான்; அதைத் தீர்த்து வைத்தவனும் நான்; இவ்வுண்மையை அவர்கள் அறிவார்களா? அறிந்தால் என்னைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்?

இன்றைய இன்பம் அவர்களிடையில் வேதனை நீங்கிப் பரிபூரணத்துவம் பெற்று விளங்குவது இடையிலே

பிறந்த வேதனையினால் தான், என்பதையாவது அவர்கள் கண்டார்களா?

இப்படி என்மனம் எண்ணற்ற கேள்விகள் போடுகிறது. இவற்றுக்கெல்லாம் விடை தேவையில்லை. 'தத்துவம் அதிசயத்தில் ஆரம்பிக்கிறது' ('Philosophy begins with wonder') என்றான் பிளேட்டோ. என்ன, ஏன் என்று கேள்விகளை எழுப்புவது தான் தத்துவ சாஸ்திரியின் வேலை. இந்த கேள்விகளுக்கு விடைகள்—முடிவான விடைகள்—கிடைத்து விட்டால்—அவை தத்துவ விசாரணைப் பகுதியினின்று விடுபட்டு விஞ்ஞான விளக்கம் என்ற பகுதிக்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

என்னைப் பொருத்த மட்டில் அர்த்தமற்ற சந்தேகத்துக்கு ஆளாகி வதைபட்ட இந்த அனர்த்தத்திலிருந்து கிடைத்த விடுதலை ஒன்றே போதும். இது ஒன்றுக்காகவே உலகம் என்னைப் போற்றும் என்பதில் ஐயமில்லை.

"குற்றமிலனாய்க்குடி செய்து வாழ்வானைச்
சுற்றமாய்ச் சுற்று முலகு"

என்பது பொய்யா மொழியல்லவா?

சுதாமதியின் உடல் நிலையும் தெளிவடைந்துவிட்டது; அவள் கர்ப்பவதி என்பது ஏற்பட்டு விட்டது. அடுத்த ஆண்டில் இந்தப் பொதுக்கூட்டமோகம் சதானந்தனை விட்டுப் பறந்தோடிப் போகிறதா, இல்லையா பாருங்களேன்— ஆமாம்; இந்த விஷயத்தில் நான் தத்துவ சாஸ்திரிமட்டுமல்ல; ஜோசியனும் கூட! ஆண்டவன் அருளால் அவர்களுக்கு நல்லஆண்மகவொன்று பிறந்து அவர்கள் குடும்பம் நீடுழி வாழட்டும்!

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக"

புரட்சிப் பாதையில் சென்று வெற்றிபெறும்
வீரப் பெண்மணி!

※

# — சமையல்காரி —

ஒற்றையங்க நாடகம்.

ஆசிரியர்:

K. V. வீரராகவன், B. A., B. L.

விலை அணு ஆறு.

●

உயர்குலத்தாரின் கீழ்த்தரமான வம்புப்பேச்சுகளை
எதிர்த்து வாதாடும் சமையல்காரியின்
சாகசச்செயல்கள் படிக்கப்படிக்க
இன்பமூட்டும் அற்புத
— சித்திரம்! —

படிப்பதற்கும், நடிப்பதற்கும் ஏற்றது.

※

இராஜாம்பிகை கம்பெனி,
14, பேஸின் வாட்டர் ஒர்க்ஸ் தெரு,
சௌகார்பேட், :: சென்னை.

## படித்தீர்களா!

| | | | |
|---|---|---|---|
| இன்ப வேதனை K. V. வீரராகவன் B.A., B.L. | 0 | 8 | 0 |
| சமையல்காரி ,, | 0 | 6 | 0 |
| ஜமீன்தார் பெண்—ரத்னராஜ் | 0 | 4 | 0 |
| கோதை கண்ட களவு—ஆயன் | 0 | 2 | 0 |
| மகாத்மா காந்தி தியானம்—ஆயன் | 0 | 2 | 0 |
| ஸ்ரீ கந்தர் தியானம்—ஏகப்பன் | 0 | 2 | 0 |

## விரைவில் வெளிவரும்.

இராணியின் காதல்

அதிர்ஷ்ட தேவதை

ஹாஸ்ய விடுகவி கதம்பம்

ஸ்ரீ திருமுருகர் தியான நாமாவளி

கிடைக்குமிடம்:

**இராஜாம்பிகை கம்பெனி,**
14, பேசின் வாட்டர் ஒர்க்ஸ் தெரு,
சௌகார்பேட், சென்னை.

**குறிப்பு:**—தமிழ்ப் புத்தகங்கள் முற்றும் அடங்கிய புத்தக விலைப்பட்டி தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் இலவசமாக அனுப்பப்படும்.

Wrapper Printed at Social Printers, Sowcarpet, Madras—1